**காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்**
**31.01.2024 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தின்**
**தீர்மானம் நகல்கள்**

**பொருள் எண்: 1**

காயல்பட்டினம் நகராட்சியின் 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. N.பூங்கொடி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

- 9 வது வார்டுக்குட்பட்ட தெருக்களில் மழைநீர் தேங்காத வண்ணம் மழைநீர் வடிகால் வசதியுடன் சாலைகள் அமைத்து தர கோருதல்

**மின் விளக்கு**

- 9 வது வார்டுக்குட்பட்ட கீழலெட்சுமிபுரம், லெட்சுமிபுரம், L.R.நகர், அழகாபுரி, மேலலெட்சுமிபுரம் ஆகிய தெருக்களில் குடியிருப்புகள் அதிக அளவில் வந்துள்ளதால் அத்தெருக்களில் தெரு விளக்கு அமைத்து தரகோருதல்

**பொது**

- L.R.நகர் ஆர்ச்சிக்கு மேல் பக்கம் ஒரு மின் கம்பமும் லெட்சுமிபுரம் கோவில் பின் புறம் உள்ள தெருவில் இரண்டு மின் கம்பங்கலும் பழுதாகி உள்ளதால் மாற்றி தர கோருதல்
- 9வது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை அமைத்து தர கோருதல்

**தீர்மானம் எண்.629**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணி செய்வதற்கு உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 2**

வடகிழக்கு பருவமழை 2023– வடகிழக்கு பருவமழையின் காரணமாக கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் தமிழ்நாட்டிலேயே அதிக பட்சமாக சுமார் 930மி.மீ என்ற அளவினில் அதிக மழை பொழிவு ஏற்பட்டதன் காரணமாக காயல்பட்டினம் நகர் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட குடிநீர் பணிகளை பராமரிப்பு செய்வதற்கு 2023–24–ம் ஆண்டு மூலதன மானிய நிதி – (CGF) – இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (Operation and Maintenance Works) (Phase –VI)–ன் கீழ், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சம்) |
|---|---|---|
| 1. | பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையம் முதல் காயல்பட்டினம் வரை சேதமடைந்த பிரதான குடிநீர் குழாய்களை பராமரிப்பு பணிகள் | 161.00 |
| 2. | பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார்கள் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் புதிதாக சென்ரல்பிக்சல் பம்ப் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி | 42.00 |
| மொத்தம் | | 203.00 |

மேற்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.21062/2023/SS2 நாள்.23.01.2023–ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு:–</u>

- நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விபரத்தினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
- திட்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.120/2024/இ1)**

**<u>தீர்மானம் எண்.630</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 3**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024–ம் ஆண்டு திட்டத்தின் கீழ், காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்கு அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.14.09.2023–ன்படி, ரூ.550.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு (திட்ட நிதி ரூ.275.00 இலட்சம் & நகராட்சி பங்கு ரூ.275.00 இலட்சம்) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. அதனை தொடர்ந்து காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மான எண்.502 நாள்.27.09.2023 மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை செயற்பொறியாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.18484/2023/DO1 நாள்.29.09.2023–ந் தேதிய தொழில்நுட்ப அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள்.05.10.2023–ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதன்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யும் பணி ரூ.550.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 15.12.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1 M/s. M.J. Engineering Constrcution,
முதல் மாடி கார்மல் பள்ளி காம்பளக்ஸ்,
இராமன்புதூர்,
நாகர்கோவில்–629004.

2 M/s. T.M. Builders,
காமச்சம் பரப்பு பறக்கை அஞ்சல்,
கன்னியாகுமரி –629601.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக உள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 19.01.2024 அன்று மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் முதல் விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தின்படி, கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. M.J. Engineering Constrcution,<br>முதல் மாடி கார்மல் பள்ளி காம்பளக்ஸ்,<br>இராமன்புதூர்,<br>நாகர்கோவில்–629004. | மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு |
| 2 | M/s. T.M. Builders,<br>காமச்சம் பரப்பு பறக்கை அஞ்சல்,<br>கன்னியாகுமரி – 629601. | மதிப்பீடு ரேட்டை விட 11.51 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. M.J. Engineering Constrcution என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். திட்டப் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>:–**

1. M/s. M.J. Engineering Constrcution என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.477/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.631</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 4**

காயல்பட்டினம் நகராட்சி குளோரின் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால், குளோரின் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து தானியங்கி முறையில் இயக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.9,95,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து, அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து

மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.518 நாள்.27.09.2023–ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று, ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | R K Enterprises<br>15,669, காந்தி நகர்<br>நாட்டுக்கல் –PO –678554 | மதிப்பீடு ரேட்டை விட 0.12% குறைவு |
| 2. | Perfect Trading Company<br>16B,RRசுவாமிலைன், அனுப்பர்பாளையம்<br>கோயம்புத்தூர் –641009 | மதிப்பீடு ரேட்டை விட 2.89 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. RK Enterprises என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:–**

1. M/s. RK Enterprises என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1704/2023/இ1)**

**தீர்மானம் எண்.632**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 5**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024–ம் ஆண்டு திட்டத்தின் கீழ், காயல்பட்டினம் நகராட்சி புதிய சந்தைகள் அமைப்பதற்கு அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.14.09.2023–ன்படி, ரூ.153.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு (திட்ட நிதி ரூ.77.00 இலட்சம் & நகராட்சி பங்கு ரூ.76.00 இலட்சம்) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. அதனை தொடர்ந்து காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மான எண்.503 நாள்.27.09.2023 மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை செயற்பொறியாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.18484/2023/DO1 நாள்.29.09.2023–ந் தேதிய தொழில்நுட்ப அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள்.05.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதன்படி, இந்நகராட்சி புதிய சந்தைகள் அமைக்கும் பணி ரூ.153.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 15.12.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1 M/s. M.J. Engineering Constrcution,
முதல் மாடி கார்மல் பள்ளி காம்பளக்ஸ்,
இராமன்புதூர்,
நாகர்கோவில்–629004.

2 M/s. T.M. Builders,
காமச்சம் பரப்பு பறக்கை அஞ்சல்,
கன்னியாகுமரி –629601.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக உள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 19.01.2024 அன்று மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் முதல் விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தின்படி, கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. M.J. Engineering Constrcution,<br>முதல் மாடி கார்மல் பள்ளி காம்பளக்ஸ்,<br>இராமன்புதூர்,<br>நாகர்கோவில்–629004. | மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு |
| 2 | M/s. T.M. Builders,<br>காமச்சம் பரப்பு பறக்கை அஞ்சல்,<br>கன்னியாகுமரி – 629601. | மதிப்பீடு ரேட்டை விட 11.72% கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. M.J. Engineering Constrcution என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். திட்டப் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:–

1. M/s. M.J. Engineering Constrcution என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.478/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.633</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 6**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை 101 நாள். 30.04.1997–ன் படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நாள். 24.08.2022–ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை

எண்.24608/2022/EA2 நாள். 21.10.2022–ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை உத்திரவு ந.க.எண்.32945/2022/EA2–SWM–11–ன் படி, துப்புரவு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறை உத்திரவில் Annexure 2–ன்படி, நகராட்சி பணியாளர் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 20 நபர்களைக் கொண்டு செய்யக்கூடிய பணிகள் வரைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அதில் பேருந்து நிலைய தூய்மைப்பணி, மார்க்கெட், தெரு பெருக்குதல், கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல், புல் பூண்டு வெட்டுதல் போன்ற பணிகள் அடங்கும். இந்நிலையில் இந்நகராட்சியில் பணிபுரிந்து வந்த நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் 20 நபர்களில் பணி உயர்வு மற்றும் இறப்பு இவற்றின் காரணமாக தற்போது 10 நபர்கள் பணியில் உள்ளனர். இதனால், மேற்காணும், பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில் அமைந்துள்ள இரண்டு (2) பசுமை உரக்கிடங்கு (MCC) மற்றும் ஒரு (1) வள மீட்பு மையம் (RRC) இயக்கத்தில் சிரமம் ஏற்படுகிறது. ஏற்கனவே, பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும் பசுமை உரக்கிடங்கு பராமரிப்பிற்கு 8 நபர்களும் வள மீட்பு மைய பராமரிப்பிற்கு நான்கு (4) நபர்களும், தெரு பெருக்குதல், கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல், மார்க்கெட் தூய்மைப்பணி, பேருந்து நிலைய தூய்மைப்பணி இவற்றை மேற்கொள்ள எட்டு (8) நபர்கள் என இருபது (20) நபர்கள் வெளிக்கொணர்வு முறையில் பணியமர்த்திக் கொள்ள வேண்டியுள்ளது.

பொதுச்சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி இவர்களை, இந்நகராட்சிக்கு ஏற்கனவே தற்காலிக நோய் தடுப்பு பணியாளர்களை வழங்கும் நிறுவனத்தின் மூலமாக 2022– 2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட மஸ்தூர் தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் இந்நகர்மன்ற தீர்மான எண்.300 நாள்.28.02.2023 மற்றும் தீர்மான எண்.360 நாள்.27.04.2023–ல் அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தின்படி, கூடுதலாக இருபது (20) நபர்களை பணி செய்ய வழங்க கோரியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:–

- பொதுச்சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்கு தேவையான இருபது நபர்களை டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வழங்கும் நிறுவனம் மூலம் கூடுதலாக பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.634</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 7**

வடகிழக்கு பருவமழை 2023– வடகிழக்கு பருவமழையின் காரணமாக கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் தூத்துக்குடி மாவட்டம்,

காயல்பட்டினம் நகர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் தமிழ்நாட்டிலேயே அதிக பட்சமாக சுமார் 930மி.மீ என்ற வரலாறு காணாத கனமழை காரணமாக அதிக அளவு மழை நீர் தேக்கமடைந்துள்ளதை போர்க்கால அடிப்படையில் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் தொற்று நோய் பரவாமல் தடுக்கவும், டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்கள் வராமல் தடுக்கவும் வீடு வீடாக புகை மருந்து அடிக்கவும் முதிர் கொசுக்களை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, இந்நகர் அனைத்து பகுதிகளிலும், புகைமருந்து அடிக்க வேண்டியிருப்பதால் அவசர அவசியம் கருதி கூடுதலாக 6 எண்ணம் கையடக்க புகை போக்கி இயந்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது.

இந்நகராட்சி பொதுச் சுகாதார பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது

<u>அலுவலக்குறிப்பு:–</u>

- பொதுச்சுகாதார பணியின் அவசியம் கருதி 6 எண்ணம் கையடக்க புகை போக்கி இயந்திரங்கள் வாங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.635</u>

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 8**

காயல்பட்டினம் நகராட்சி சிவன் கோவில் தெருவில் இயங்கிவரும் நுண்உரக்குடில் மையத்தில் பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/–ஐ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு:–</u>

- ரூ.4,00,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- பொது சுகாதார பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.636</u>

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 9**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தைக்காபுரம் பகுதியில் மக்கள் பயன்பாட்டிற்காக புதிய கிணறு அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும்

ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,80,000/-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:-

- ரூ.1,80,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- பொது மக்கள் நலன் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.637</u>

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 10**

காயல்பட்டினம் நகராட்சி தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் பொன்னன்குறிச்சி முதல் காயல்பட்டினம் நகராட்சி வரை 350mm D.I பைப் லைன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த டிசம்பர்-2023 மாதம் 17-ம் தேதி பெய்த பலத்த கடும் மழையின் காரணமாக தூத்துக்குடி - திருச்செந்தூர் - கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் (DCWஅருகில்) பைப்லைன் அடிதளத்தில் இருந்த மண் அனைத்தும் மழை வெள்ளத்தில் அரித்து சென்று விட்டதால் குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டது. ஆகையால், குடிநீர் குழாய் பழுது நீக்கம் செய்யப்பட்ட பின்பு அதன் அடித்தளத்தில் கான்கிரீட் மேடை அமைத்து குடிநீர் குழாய் பாதுகாப்பாகவும், சேதமடையாமல் மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு இப்பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:-

- ரூ.3,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.638</u>

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 11**

காயல்பட்டினம் நகராட்சி வார்டு எண்.10 வண்ணாக்குடி கடைத் தெருவில் அமைந்துள்ள தினசரி மீன் சந்தை கட்டிடமானது மேற்கூரைகள் மற்றும் பக்கவாட்டு சுவர்கள் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில், வடகிழக்கு பருவமழை 2023-ன்

காரணமாக இந்நகர்பகுதியில் பெய்த கனமழையில் தினசரி மீன் சந்தை கட்டிடத்தின் மேற்கூரைகள் மற்றும் பக்கவாட்டு சுவர்கள் இடிந்து வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் சந்தையை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. பாதுகாப்பை கருத்தில் கொண்டு மீண்டும் சந்தையினை பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மீண்டும் சந்தையினை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும்.அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு:–</u>

- பணியின் அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.639</u>

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 12**

தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் 1920 பிரிவு 34 நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்வி வரி வசூல் செய்வதற்கு பிரிவு 35(1) ன்படி சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5% மிகாமல் வரிவிதிப்பு செய்வதற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தம் 2022ன்படி பிரிவு 81ன்படி) சொத்து வரியுடன் நகர்மன்றங்கள் கல்வி வரியினை வரிவிதிப்பு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது சட்டப்பிரிவு 91 நகர்மன்றம் 5%க்கு மிகாமல் சொத்துவரியுடன் கல்வி வரியினை நிர்ணயம் செய்வதற்கு வழிவகை உள்ளதால் காயல்பட்டினம் நகராட்சியில் சொத்து வரியுடன் கல்வி வரியினை 5% நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். கல்வி வரியானது 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக்குறிப்பு:–</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.32658/R1/2023 நாள் 27.12.2023ல் காயல்பட்டினம் நகராட்சி கல்வி வரியினை சொத்து வரியுடன் வசூலிப்பதற்கு நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால் 01.04.2024 முதல் சொத்து வரியுடன் கல்வி வரி நிர்ணயம் செய்து வசூலிக்க அனுமதி வழங்கலாம்.

<u>தீர்மானம் எண்.640</u>

- ஒத்திவைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 13**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஜெராக்ஸ் பிரிண்டிங் மிஷின் (Cannon Image Rannar–W2525) பழுதுகள் ஏற்படும் பட்சத்தில்

அலுவலக கோப்புகள் ஜெராக்ஸ் மற்றும் பிரிண்டிங் எடுக்க இயலாத நிலை ஏற்பட்டு அலுவலக பணிகள் செய்வதில் தொய்வு ஏற்படுகிறது. ஆகவே, நிர்வாக நலனை கருத்தில் கொண்டு Cannon ஜெராக்ஸ் இயந்திரதை பழுது நீக்கம் செய்தவற்கு Cannon நிறுவனம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டர் மற்றும் விற்பனை நிறுவனங்கள் பழுது நீக்க பணிகள் செய்வதற்குரிய உத்தேச செலவினம் ரூ.75,000/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுதிக்காக முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:-

1. உத்தேச செலவினம் ரூ.75,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. Cannon நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிறுவனம் மூலம் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் பணிகள் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.641</u>

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 14**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான பதிவேடுகள், படிவங்கள், கணினி இரசீதுகள், எழுது பொருட்கள், மற்றும் ஸ்டேஷ்னரி பொருட்கள் 2024 - 2025 ஆம் ஆண்டுக்கு வாங்க வேண்டியுள்ளது. அவற்றை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு சொசைட்டி மூலம் வாங்குவதற்குரிய உத்தேச செலவீனம் ரூ.9.50 இலட்சம் ஆகும். மேற்காணும் செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:-

1. கூட்டுறவு சொசைட்டி மூலம் 2024-25-ம் ஆண்டுக்குரிய பொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.997/2015/அ1)**

<u>தீர்மானம் எண்.642</u>

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 15**

காயல்பட்டினம் நகராட்சி கணக்குகள் UTIS மென்பொருள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணக்குகள் உரிய கணக்கு தலைப்புகளில் வரவு & செலவினங்கள் (Receipt & Expenditure), ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விவரம் (Balance Sheet) ஆகியவைகள் ஏழு இலக்க முறையில் ஆண்டு கணக்குகள் தயார் செய்து உள்ளாட்சி தணிக்கைத்துறையின் ஒப்புதலுக்கு, அளிக்கும் பொருட்டு 2022-2023-ம் ஆண்டுக்குரிய கணக்குகள் தனியார் கணக்கு ஆலோசகர்

(Private Accounts Consultancy) கோவில்பட்டி திரு. நீலசந்திரன் பி.காம்., என்பவரால் தயார் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய கட்டணம் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.126/2015/அ1)

<u>அலுவலக்குறிப்பு</u>:–

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.30,000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.643</u>

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 16**

காயல்பட்டினம் நகராட்சிக்கு எதிராக தேசிய பசுமை தீர்ப்பாயம் சென்னையில் திரு.பால்ராஜ், என்பவரால் தொடரப்பட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பான வழக்கு எண். O.S. 50/2016 மற்றும் மேல்முறையீட்டு எண்.57/2021 ஆகியவற்றிற்கு நகராட்சி சார்பாக கடந்த 10.11.2023 மற்றும் 14.12.2023 ஆகிய இரண்டு தேதிகளில் வாதுரைக்கு வந்த போது தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகிய வகைக்கு, வழக்கு கட்டணமாக முறையே, தொகை ரூ.65000/–, ரூ.40000/– ஆகியவற்றினை நகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>:–

நிர்வாக நலன் மற்றும் அவசர அவசியம் கருதி வழக்கு கட்டணங்கள் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு எண்**.958/2016/அ4)

<u>தீர்மானம் எண்.644</u>

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 17**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளில் டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்கள்வராமல் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வீட்டின் உட்புறத்தில் மருந்து தெளிக்கும் (Indoor fogging machine) பணிகள் மேற்கொள்ள சிலிண்டர் மூலம் பயன்படுத்தக்கூடிய கையடக்க புகை போக்கி இயந்திரம் வாங்குவதற்கு நகர்மன்ற அனமதியை எதிர்நோக்கி 05.01.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|
| | | திருமலை டிரேடர்ஸ், திருநெல்வேலி | ஸ்ரீநம்பி கெமிக்கல்ஸ், திருநெல்வேலி | திருமுருகன் கெமிக்கல்ஸ், திருநெல்வேலி |
| 1. | கையடக்க புகை போக்கி இயந்திரம் ஒரு (1) எண்ணம் | ரூ.11,900/– | ரூ.13,600/– | ரூ.13,500/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. திருமலை டிரேடர்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகர்மன்றத்தின் அனுமதிகாக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு,**

- கையடக்க புகை போக்கி இயந்திரம் விநியோகம் செய்வதற்கு ரூ.11,900/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. திருமலை டிரேடர்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- பொது சுகாதார பணியின் அவசியம் கருதி புதிதாக கையடக்க புகை போக்கி இயந்திரங்கள் புதிதாக வாங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.2672/2023/எச்1)**

**<u>தீர்மானம் எண்.645</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 18**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடம் மற்றும் பணியாளர் குடியிருப்புகளுக்கு 2009-2010 முதல் 2022-2023 வரையிலான, நிலுவை சொத்துவரி ரூ.2,03,570/-ஐ செலுத்த கோரி பல முறை இவ்வலுவலகம் மூலம் BSNL நிறுவனத்திற்கு கேட்பு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து BSNL அலுவலக கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளவாறு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்-24385/ஆர்1/2023-5, நாள்-07.02.2023-ன்படி, தொலைத்தொடர்புத் துறையால் வெளியிடப்பட்ட குடியரசுத் தலைவர் ஆணை மூலம் இந்திய அரசிடமிருந்து பிஎஸ்என்எல் நிறுவனத்துக்குச் சொத்து பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது- மறுஆய்வு விண்ணப்பம் (MD) எண்.77 முதல் 84 வரை 2018-ன் புள்ளி எண்.9 அனைத்து நோக்கங்களுக்காகவும், அதாவது தொலைபேசி பரிமாற்றம் மற்றும் காலாண்டு கட்டிடம் 9 ஆகியவை BSNL-க்கு 19.04.2011 முதல் பாயிண்ட் எண்.10-ல் உள்ளதாகக் கருதப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதியின் உத்தரவு அடிப்படையில் 19.04.2011 முதல் சொத்து வரியை மறுமதிப்பீடு செய்து மேற்கூரிய விஷயத்தைப் பற்றிய திருத்தப்பட்ட கேட்பு அறிவிப்பினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காயல்பட்டினம் BSNL நிறுவனத்திற்கு 2009-2010 முதல் 2010 -2011 வரை உள்ள நிலுவை சொத்துவரி ரூ.26,812/-ஐ இவ்வலுவலக UTIS மென்பொருளில் கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும், 2011 -2012 முதல் சொத்துவரியை மறு மதிப்பீடு செய்து, திருத்திய நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி கேட்புகளை BSNL நிறுவனத்திற்கு அனுப்பும் பொருட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**

- BSNL நிறுவனத்தின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 2009-2010 முதல் 2010 - 2011 வரை உள்ள நிலுவை சொத்துவரி ரூ.26,812/- கேட்புகளை UTIS மென்பொருளில் கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
- BSNL நிறுவனத்திற்கு 2011 -2012 முதல் சொத்துவரியை மறு மதிப்பீடு செய்து திருத்தியவாறு சொத்து வரி கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.646</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 19**

காயல்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 57(7)-ன் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.647</u>**

- பிரிவு 57(7) பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:20**

காயல்பட்டினம் நகராட்சியின் ஏப்ரல்-2023 முதல் டிசம்பர் - 2023 ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Tax Type | DCB Type | No of Assts. | Demand(lakhs) | | | Collection(lakhs) | | | Balance(lakhs) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Arrear | Current | Total | Arrear | Current | Total | Arrear | Current | Total |
| 1.Property Tax | Collectable | 16690 | 21.47 | 169.44 | 190.92 | 10.87 | 134.49 | 145.4 | 10.60 | 34.95 | 45.56 |
| | Govt.Building | 20 | 2.00 | 0.47 | 2.47 | 0.00 | 0.09 | 0.09 | 2.00 | 0.38 | 2.38 |
| | **Total** | **16710** | **23.48** | **169.91** | **193.38** | **10.87** | **134.58** | **145.5** | **12.61** | **35.33** | **47.93** |
| 2.Vacant Land Tax | Collectable | 1296 | 14.91 | 12.05 | 26.96 | 10.78 | 7.87 | 18.65 | 4.13 | 4.18 | 8.31 |
| | **Total** | **1296** | **14.91** | **12.05** | **26.96** | **10.78** | **7.87** | **18.65** | **4.13** | **4.18** | **8.31** |
| 3.Profession Tax | Individual | 358 | 0.12 | 2.62 | 2.74 | 0.12 | 1.83 | 1.95 | (0.00) | 0.79 | 0.79 |
| | Organization | 40 | 0.24 | 17.58 | 17.82 | 0.24 | 16.38 | 16.62 | 0.00 | 1.20 | 1.20 |
| | **Total** | **398** | **0.36** | **20.20** | **20.56** | **0.36** | **18.22** | **18.58** | **0.00** | **1.98** | **1.98** |
| 4.Water Charges | Collectable | 10357 | 27.71 | 61.43 | 89.14 | 10.73 | 37.65 | 48.38 | 16.98 | 23.78 | 40.76 |
| | **Total** | **10357** | **27.71** | **61.43** | **89.14** | **10.73** | **37.65** | **48.38** | **16.98** | **23.78** | **40.76** |
| 5.Non Tax | Collectable | 23 | 1.18 | 10.79 | 11.97 | 1.15 | 6.14 | 7.29 | 0.03 | 4.65 | 4.68 |
| | **Total** | **23** | **1.18** | **10.79** | **11.97** | **1.15** | **6.14** | **7.29** | **0.03** | **4.65** | **4.68** |
| 6.SUC | | 16 | 0.00 | 0.02 | 0.02 | 0.00 | 0.00 | 0 | 0.00 | 0.02 | 0.02 |
| | Commercial | 1847 | 1.97 | 4.46 | 6.43 | 0.75 | 2.46 | 3.21 | 1.22 | 2.00 | 3.22 |
| | Edu. Institution | 17 | 0.33 | 0.06 | 0.39 | 0.26 | 0.05 | 0.31 | 0.07 | 0.01 | 0.08 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Industrial | 93 | 0.00 | 0.18 | 0.18 | 0.00 | 0.16 | 0.16 | 0.00 | 0.02 | 0.02 |
| | Residential | 29434 | 8.01 | 20.41 | 28.42 | 1.63 | 6.68 | 8.31 | 6.38 | 13.73 | 20.11 |
| | Total | 31407 | 10.31 | 25.14 | 35.45 | 2.64 | 9.34 | 11.98 | 7.67 | 15.80 | 23.47 |
| | Grand Total | 60191 | 77.95 | 299.52 | 377.47 | 36.52 | 213.79 | 250.3 | 41.43 | 85.73 | 127.16 |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.648</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:21**

காயல்பட்டினம் நகராட்சியின் ஏப்ரல்–2023 முதல் டிசம்பர் – 2023 மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரவினங்கள் (இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 182.68 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 110.22 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 13.86 |
| 160 | மானியங்கள் | 1-6 | 527.3 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 0.08 |
| 180 | இதர வருமானம் | I-9 | 11.43 |
| **மொத்தம்** | | | **845.57** |
| **செலவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 282.40 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 54.62 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 536.89 |
| 260 | நகராட்சி பங்குத்தொகை | 1-15 | 12.76 |
| **மொத்தம்** | | | **886.67** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **41.10** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.649</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**